# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## பகிரங்க சொத்துக்கள் முகாமை

**நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களம் எனவழைக்கப்படவேண்டியதும் அறியப் படவேண்டியதுமான திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கென ஏற்பாடு செய்வதற் கும்; பகிரங்க நிறுவனமொன்றினால் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்படும், குறித்தளிக்கப்படும், உடைமையில் வைத்திருக்கப்படும், அதற்கு உரித்தாக்கப்படும், வைத்திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் நிதிசாரா அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அடையாளம் காணுவதற்கும் அவற்றிற்கான தேசிய சொத்து இடாப்பொன்றைத் தொகுப்பதற்கும்; அத்தகைய இடாப்பை காலத்துக்குக்காலம் நாளதுவரையாக்குவதற்கும் அத்தகைய சொத்துக்களின் முறையான விபரத்திரட்டுக் களை பகிரங்க நிறுவனங்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

---

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் 2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2024, ஓகத்து மாதம் 02 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **284 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 30.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பகிரங்க சொத்துக்கள் முகாமை

*ச.வ.-ஒ. 43/2022*

***நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களம் எனவழைக்கப்படவேண்டியதும் அறியப்படவேண்டியதுமான திணைக்களமொன்றைத் தாபிப்பதற்கென ஏற்பாடு செய்வதற்கும்; பகிரங்க நிறுவனமொன்றினால் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்படும், குறித்தளிக்கப்படும், உடைமையில் வைத்திருக்கப்படும், அதற்கு உரித்தாக்கப்படும், வைத்திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் நிதிசாரா அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை அடையாளம் காணுவதற்கும் அவற்றிற்கான தேசிய சொத்து இடாப்பொன்றைத் தொகுப்பதற்கும்; அத்தகைய இடாப்பை காலத்துக்குக்காலம் நாளதுவரையாக்குவதற்கும் அத்தகைய சொத்துக்களின் முறையான விபரத்திரட்டுக்களை பகிரங்க நிறுவனங்களுக்கு உறுதிப்படுத்துவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

***1.*** *(1) இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பகிரங்க சொத்துக்கள் முகாமைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*(2) எட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டம் பாராளுமன்றத்தின் சட்டமொன்றாக சான்றுப்படுத்தப்படுகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

*(3) எட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், தேசிய சொத்துக்கள் இடாப்பு படிப்படியாக பூர்த்தி செய்யப்படுவதனைக் கருத்திற்கொண்டு, (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி"*

எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கின்றவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

## பாகம் I

### நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களத்தைத் தாபித்தல்

*நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களத்தைத் தாபித்தல்*

**2.** (இதனகத்துப்பின்னர் "திணைக்களம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியதிகாரி தலைமையதிபதித் திணைக்களம் எனவழைக்கப்படும் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

*நிதியதிகாரி தலைமையதிபதியும் வேறு அலுவலர்களும் ஊழியர்களும்*

**3.** (1) இதனகத்துப்பின்னர் "நிதியதிகாரி தலைமையதிபதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) திணைக்களத்தின் தலைவராக விருக்கவேண்டிய நிதியதிகாரி தலைமையதிபதியொருவரும் திணைக்களத்தின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு காலத்துக்குக்காலம் தேவைப் படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு அலுவலர்களும் ஊழியர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதியதிகாரி தலைமையதிபதி, பகிரங்க நிறுவனமொன்றின் நிதிசாரா சொத்துக்கள் தொடர்பாக காலத்துக்குக்காலம் அவசியமெனக் கருதப்படக்கூடியவாறான அவரின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் எவற்றையும் உரிய பகிரங்க நிறுவனத்தின் தலைவருக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

*திணைக்களத்தின் குறிக்கோள்கள்*

**4.** திணைக்களத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) நிதிசாரா சொத்துக்களைப் பதிவதற்கு நாளதுவரையாக்கப்பட்டதும் எல்லாமடங்கியதுமான மத்திய தரவுத்தளமொன்றைத் தாபித்தல் மற்றும் அதற்கிணங்க நிதிசாரா சொத்துக்களின் இயைபான விபரங்கள் அடங்கிய தேசிய சொத்துக்கள் இடாப்பொன்றையும் தாபித்தல்;

(ஆ) நிதிசாரா சொத்துக்கள் காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் கொள்கைகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க பகிரங்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்டு முகாமை செய்யப்படுகின்றன என உறுதிப்படுத்துதல்;

(இ) அரசாங்கத்தின் அபிவிருத்திக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கு நிதிசாரா சொத்துக்களின் பயனுள்ள மற்றும் வினைத்திறனுடனான பயன்பாட்டுக்கான வழிகாட்டுகையை வழங்குதல்; அத்துடன்

(ஈ) பகிரங்க நிறுவனங்களினால் நிதிசாரா சொத்துக்கள் கையுதிர்க்கப்படுகின்றவிடத்து அத்தகைய பகிரங்க நிறுவனங்களினாலான அரசிறையின் சேகரிப்பை உறுதிப்படுத்துதல்.

*திணைக்களத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்*

**5.** திணைக்களத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இயைபான கொள்கைகள், வழிகாட்டு நெறிகள் மற்றும் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க நிதிசாரா சொத்துக்களை அடையாளங்கண்டு வகுப்பாக்கம் செய்தல்;

(ஆ) நிதிசாரா சொத்துக்களின் விபரங்களை பகிரங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்;

(இ) அமைச்சர் காலத்துக்குக்காலம் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வர்த்தகமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் அடையாளங்கண்ட நிதிசாரா சொத்துக்களின் இயைபான விபரங்கள் அடங்கிய அத்தகைய நிதிசாரா சொத்துக்களைப் பதிவதற்கு எல்லாமடங்கிய மத்திய தரவுத்தளமொன்றை உருவாக்கித் தாபித்தல்;

(ஈ) நிதியதிகாரி தலைமையதிபதியினால் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாக காலத்துக்குக்காலம் மத்திய தரவுத்தளத்தை நாளதுவரையாக்குதல்;

(உ) இப்பிரிவின் (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட மத்திய தரவுத்தளத்தின் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு தேசிய சொத்துக்கள் இடாப்பைத் தொகுத்தல் மற்றும் நிதியதிகாரி தலைமையதிபதியினால் அதற்கென ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறாக காலத்துக்குக்காலம் அத்தகைய இடாப்பை நாளதுவரையாக்குதல்;

(ஊ) ஏழாம், 12 ஆம் மற்றும் 13 ஆம் பிரிவுகளில் தரப்பட்ட கருமங்களுக்கு பயன்கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் நிதிசாரா சொத்துக்களை முகாமைசெய்யும் நோக்கத்துக்காக பகிரங்க நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதல்;

(எ) இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட முறையில் நிதிசாரா சொத்துக்களின் பெறுமான மதிப்பீட்டை உறுதிப்படுத்துவதற்கு 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் பணிப்புரை களைத் தயாரிப்பதற்காக விதப்புரைகளைச்செய்தல்;

(ஏ) பகிரங்க நிறுவனமொன்றினால் வேறொரு திறத்த வருக்கு குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் விடுவிக்கப்படுகின்ற நேரத்தில், அரசாங்க நடவடிக்கைமுறையினூடாக அல்லது அமைச்சரவை யினால் விதிக்கப்பட்ட இயைபான நடவடிக்கை முறையினூடாக கையுதிர்க்கப்படுகின்ற நேரத்தில் நிதிசாரா சொத்துக்களின் மதிப்பீடு தொடர்பிலும் அத்தகைய நிதிசாரா சொத்துக்களின் அரசிறைச்

சேகரிப்பு மற்றும் அறிக்கையிடல் தொடர்பிலும் 7 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்படவேண்டிய வழிகாட்டு நெறிகள் மற்றும் பணிப்புரைகளைத் தயாரிப்பதற்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ஐ) நிதிசாரா சொத்துக்கள் சட்டவிரோதமான முறையொன்றில் வேறு திறத்தவர்களால் கொள்ளுதல் செய்யப்படுகின்றதென அல்லது பயன்படுத்தப்படுகின்றதென தகவல்கள் பெறப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சொத்துக்களின் உடைமையை மீளப்பெறும் செயன்முறையின்போது இயைபான பகிரங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்;

(ஒ) நிதிசாரா சொத்துக்கள் தகுந்தமுறையில் பயன்படுத்தப்படவில்லையெனத் தோன்றுமிடத்தான விடயங்களிலும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அத்தகைய சொத்துக்களை பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியுமான வேறு பகிரங்க நிறுவனங்களை அடையாளங்கண்டும் அவற்றுக்காக எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான வழிமுறைகள் பற்றி யோசனையளித்து இயைபான பகிரங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைதல்;

(ஓ) இச்சட்டத்தின்கீழ் திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட நிதிசாரா சொத்துக்கள் தொடர்பான நிலப்படங்கள், நிலஅளவை வரைபடங்கள் அல்லது வேறு எவையேனும் ஆவணங்களின் உருப்படியான வடிவத்தை அல்லது பண்பைப் பொருட்படுத்தாமல் அவற்றின் பிரதிகளை இயைபான பகிரங்க நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளல்; அத்துடன்

(ஔ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக்கூடிய வாறாக அரசிறை கணக்கீட்டு அலுவலர் ஒருவராக செயலாற்றுதல்.

*அமைச்சர் சொத்துக்களை அடையாளங் காணுதலும் வகுப்பாக்கம் செய்தலும்*

**6.** அமைச்சர் காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப் படும் அறிவித்தல் மூலம் திறைசேரிச் செயலாளரின் விதப்பு ரையை அடிப்படையாகக்கொண்ட இயைபான விபரங்களுடன் நிதிசாரா சொத்துக்களை அடையாளங்கண்டு வகுப்பாக்கம் செய்யலாம். அத்தகைய விதப்புரைகள் நிதியதிகாரி தலைமை யதிபதியுடனான கலந்தாலோசனையுடன் செய்யப்படுதல் வேண் டும்.

*திறைசேரிச் செயலாளர் விதப்புரை களைச் செய்யலாம் மற்றும் பணிப்புக் களையும் வழிகாட்டு நெறிகளையும் வழங்கலாம்*

**7.** திறைசேரிச் செயலாளர் நிதியதிகாரி தலைமையதிபதி யுடனான கலந்தாலோசனையுடன் இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக —

(அ) அமைச்சரவையினால் கொள்கைகளை வகுத்தமைத் தல் தொடர்பில் அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்யலாம்; அத்துடன்

(ஆ) பணிப்புரைகளையும் வழிகாட்டுநெறிகளையும் வழங்க லாம்.

## பாகம் II

## தேசிய சொத்துக்கள் இடாப்பு

*தேசிய சொத்துக்கள் இடாப்பு பாராளுமன்றத் துக்கு சமர்ப்பிக்கப் படுதல்*

**8.** (1) திணைக்களமானது, நிதிசார் நியதிகளில் நிதிசாரா சொத்துக்களின் பெறுமதியுட்பட அத்தகைய நிதிசாரா சொத்துக் களின் இயைபான விபரங்களை பிரதிபலிப்பதற்கு எல்லாப் பகிரங்க நிறுவனங்கள் தொடர்பிலும் தேசிய சொத்துக்கள் இடாப்பைத் தயாரித்தல் வேண்டும்.

(2) தேசிய சொத்துக்கள் இடாப்பு ஆண்டுதோறும் நாளது வரையாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் முன்னைய நிதி ஆண்டின் இடாப்பின் சுருக்கமொன்று அடுத்துறும் ஆண்டின் யூன் மாதம் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

அமைச்சரவைக்கான அறிக்கை

**9.** திணைக்களமானது, இயைபான தகவல்களுடன்சேர்த்து நிதிசாரா சொத்துக்களின் முகாமைக்காக தேவைப்படுத்தப்படும் போது அமைச்சரவைக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

பகிரங்க நிறுவனங்களின் அலுவலர்கள் தகவல்களை வழங்குதல்

**10.** (1) திணைக்களமானது விடயத்துக்கேற்ப, ஏதேனும் பகிரங்க நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரை, கணக்கீட்டு அலுவலரை, தவிசாளரை அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரை, அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள் இயைபான பகிரங்க நிறுவனத்தின் ஏதேனும் நிதிசாரா சொத்து தொடர்பான ஏதேனும் தகவல், ஆவணம், தெளிவுபடுத்துகை, அறிக்கை அல்லது விடயத்தை சமர்ப்பிக்குமாறு எழுத்தில் தேவைப்படுத்தலாம்.

(2) திணைக்களமானது, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தகவலை அல்லது வேறு விடயத்தை தேவைப் படுத்துகின்றவிடத்து, தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய தகவலை அல்லது வேறு விடயத்தை திணைக்களத்துக்கு சமர்ப்பிப்பது விடயத்துக்கேற்ப, அத்தகைய பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர், தவிசாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

(3) தகவல் அல்லது வேறு விடயத்தை இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் சமர்ப்பிப்பதற்கு செயல்முறையில் சிரமமாக வுள்ள பட்சத்தில் அல்லது அத்தகைய தகவலை சமர்ப்பிப்பதற்கு மேலதிக நேரம் தேவைப்படுத்தப்படுகின்ற பட்சத்தில், திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் இருபத்தொரு வேலை நாட்களுக்கு மேற்படாத மேலதிக காலப்பகுதியொன்று பெற்றுக்கொள்ளவும்படலாம்.

(4) இப்பிரிவின் (3) உட்பிரிவில் விதிக்கப்பட்ட காலப்பகுதி யினுள் அத்தகைய தகவலை, ஆவணத்தை, தெளிவுபடுத்து கையை, அறிக்கையை அல்லது விடயத்தை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது மறுக்கின்ற விடயத்துக்கேற்ப, பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர், தவிசாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய காலப்பகுதி முடிவுறுவதிலிருந்து இரண்டு கிழமைகளினுள் நிதியதிகாரி

தலைமையதிபதிக்கு தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய தகவலை அல்லது வேறு விடயத்தை சமர்ப்பிக்காமைக்கான விளக்கமொன்றை கொடுத்துதவுவதற்கு ஆளாதல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய விளக்கம் திறைசேரிச் செயலாளரினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட மேன்முறையீட்டுக் குழுவினால் கவனத்திற்கொள்ளப்படுதலும் வேண்டும்; அக்குழு திறைசேரியின் பிரதிச்செயலாளர், திணைக்களத்திலிருந்தான பிரதிநிதியொருவர் மற்றும் விடயத்துக்கேற்ப அத்தகைய பிரதான கணக்கீட்டு அலுவலரின், கணக்கீட்டு அலுவலரின், தவிசாளரின் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலரின் துறை அமைச்சு தவிர்ந்த அமைச்சொன்றிலிருந்தான பிரதிநிதியொருவரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டுக்குழுவானது அத்தகைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம்.

(5) இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் விளக்கமொன்றை கொடுத்துதவுவதற்கு தவறுகின்ற அல்லது மறுக்கின்ற அல்லது இப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட மேன்முறையீட்டுக் குழுவினால் விளக்கம் நிராகரிக்கப்பட்டவரான பிரதான கணக்கீட்டு அலுவலர், கணக்கீட்டு அலுவலர், தவிசாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரின் முன்னரான சுருக்க விளக்கத்தின்பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்று அத்தகைய அலுவலரினால் தனிப்பட்ட முறையில் செலுத்தப்படுவதற்கு ஆளாதலும் வேண்டும்.

## பாகம் III

## பொது

**11.** திறைசேரிச் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர், நிதியதிகாரி தலைமையதிபதி, திணைக்களத்தின் எவரேனும் ஊழியர், மேன்முறையீட்டுக் குழுவின் உறுப்பினர்கள் அல்லது அத்தகைய பதவியொன்றை முன்னர் வகித்த

வழக்கிலிருந்தான பாதுகாப்பு

ஆளொருவர் திணைக்களம் சார்பாக தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளின் பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகையைப் பின்பற்றியும் அவற்றின்போதும் இச்சட்டத்தின்கீழ் அவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாக கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக, அவர் நல்லெண்ணத்துடன் செயலாற்றினார் எனவும் எல்லா உரிய விழிப்புக்கவனத்தையும், நியாயமான கவனத்தையும் திறனையும் பிரயோகித்தார் எனவும் எண்பித்தால் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் எதுவும் அவருக்கெதிராக தொடுக்கப்படுதலாகாது.

ஒழுங்கு விதிகள்

**12.** (1) அமைச்சர், திறைசேரிச் செயலாளரின் விதப்புரைகளின்மீது, திணைக்களத்தின் குறிக்கோள்களுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் பயன்கொடுப்பதற்கென இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பில் அல்லது எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்கு விதிகள் ஆக்கப்படுவதற்கு அவசியமாகவுள்ளதோ அந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். அத்தகைய விதப்புரைகள் நிதியதிகாரி தலைமையதிபதியுடனான கலந்தாலோசனையுடன் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக் கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அது அங்கீகரிக்கப்படாத தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

விதிகள்

**13.** (1) நிதியதிகாரி தலைமையதிபதி, திறைசேரிச் செயலாளரின் விதப்புரையுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நிருவாகம் மற்றும் முகாமை தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வெளியீட்டின்மேல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

இச்சட்டத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்

**14.** (1) இச்சட்டத்துக்கான அட்டவணை அமைச்சரினால் ஆக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின்மூலம் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒவ்வொரு கட்டளையும் வசதியானளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(4) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுவதற்கு மறுக்கப்படுகின்ற அத்தகைய ஏதேனும் கட்டளை அது மறுக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்படுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**15.** (1) 2017, பெப்புருவரி 21 ஆந் தேதிய அமைச்சரவை முடிவைப் பின்பற்றி தாபிக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "அலுவலகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அமைச்சரின் அமைச்சுக்கு தற்போது இணைக்கப்பட்டுள்ளதுமான நிதியதிகாரி தலைமையதிபதியின் அலுவலகம், இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்துக்கு கைமாற்றப் பட்டதாதல் வேண்டும். பேணுகைகள்

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அலுவலகத்தின் தொழிலிலுள்ள நிதியதிகாரி தலைமையதிபதியும் எல்லா அலுவலர்களும் ஊழியர்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தின் உரியமுறையில் நியமிக்கப்பட்ட நிதியதிகாரி தலைமையதிபதியாகவும் அலுவலர் களாகவும் ஊழியர்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) அலுவலகத்தினால் நிறைவேற்றப்பட்ட எல்லாச் செயற் பாடுகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் தொடர்ந்து நிறைவேற்றப்படுதலும் வேண் டும்.

(4) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று அலுவலகத்தினால், அலுவலகத்துடன் அல்லது அலுவலகத் துக்காக உறப்பட்ட எல்லாத் தனிசுகளும், கடப்பாடுகளும், சொத்துக்களும் பொறுப்புக்களும், செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் ஈடுபடுத்தப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்களும் காரியங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தினால், திணைக்களத்துடன் அல்லது திணைக்களத்துக்காக உறப்பட்ட தனிசுகளாகவும், கடப்பாடுகளாகவும், சொத்துக்களும் பொறுப்புக்களுமாகவும், செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கை களாகவும் ஈடுபடுத்தப்பட்ட அல்லது செய்யப்படுவதற்கு உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எல்லாக் கருமங்களாகவும் காரியங் களாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அலுவலகத்துக்குச் சொந்தமான எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்துக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(6) அலுவலகம் தொடர்பில் ஆக்கப்பட்டனவும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று வலுவிலுள்ளன வும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிராததுமான எல்லா ஒழுங்குவிதிகளும், விதிகளும், வழிகாட்டுநெறிகளும் மற்றும் பணிப்புரைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளாக, விதிகளாக, வழிகாட்டுநெறிகளாக, பணிப்புரைகளாக கருதப் படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால், விதிகளினால், வழிகாட்டு நெறிகளினால், பணிப்புரைகளினால் திருத்தவும்படலாம், அதற்கு சேர்க்கவும்படலாம் அல்லது ஒழிக்கவும்படலாம்.

(7) அலுவலகத்தினால் அல்லது அலுவலகத்துக்கெதிராக தொடுக்கப்பட்டுள்ளனவும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த தேதியன்று முடிவுறாதுள்ளனவுமான எல்லாத் துடர்ச்சிகளும், குற்றவழக்குகளும், வழக்குகளும் அல்லது வழக்குநடவடிக்கைகளும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்தினால் அல்லது அதற்கெதிராக தொடுக்கப்பட்ட துடர்ச்சிகளாக, குற்றவழக்குகளாக, வழக்குகளாக அல்லது வழக்குநடவடிக்கைகளாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க தொடர்ந்து நடாத்தப்படலாம்.

(8) ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் அல்லது வேறுகுழுவினால் அலுவலகத்துக்கு சார்பாக அல்லது எதிராக பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட எல்லாத் தீர்வைகளும், கட்டளைகளும் அல்லது அளிப்புக்களும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக திணைக்களத்திற்கு சார்பாக அல்லது எதிராக பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்வைகளாக, கட்டளைகளாக அல்லது அளிப்புக்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற்கிணங்க வலுவுறுத்தவும்படலாம்.

**16.** சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தினாலொழிய- பொருள் கோடல்

"கணக்கீட்டு அலுவலர்" என்பது, திறைசேரியினால் வேறு ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படுகின்றவிடத்து தவிர, நிதி ஒழுங்குவிதிகள் 125(1) இன் நியதிகளின்படி திணைக்களமொன்றின் எல்லா நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அத்தகைய திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

"பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்பது, வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறு வகையாக குறிப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய பின்வருபவர்களை உள்ளடக்கும் —

(அ) அமைச்சொன்றின் பிரதான கணக்கீட்டு அலுவலராகவிருப்பதற்கு நியமிக்கப்படும் அத்தகைய அமைச்சுக்கான செயலாளர்;

(ஆ) அரசியலமைப்பின் உறுப்புரை 52(7) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசாங்கத் திணைக்கள மொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவர்; அல்லது

(இ) (அ)என்னும் பந்தியில் குறித்துரைக்கப் பட்டவாறு செயலாளர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படாத வேறு ஏதேனும் திணைக்களம் அல்லது உருவகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் ஒருவர்;

"அரசாங்க அரசிறை" என்பது, நிதிசாரா சொத்துக்களைக் கையுதிர்ப்பதிலிருந்தான அரசிறையை உள்ளடக்கும்;

"உள்ளூரதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை எனப்பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் அல்லது பிரதேச சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் மற்றும்

நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்ததாகவுள்ள அல்லது ஒத்த தாகவுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்று வதற்கு ஏதேனும் சட்டத்தினால் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் அல்லது 45 ஆம் உறுப்புரையின்கீழ் குறித்தளிக்கப்பட்ட நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் எனப்பொருள்படும்;

"நிதிசாரா சொத்துக்கள்" என்பது, காணிகள், கட்டிடங்கள், கட்டமைப்புகள், பொறித்தொகுதி மற்றும் எந்திரத் தொகுதி, வாகனங்கள், அலுவலக சாதனங்கள் மற்றும் தளபாடம் என வகுதிப்படுத்தப்பட்ட அல்லது இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் நிதிசாரா சொத்துக்களாக வெளிப் படுத்தப்பட்ட; அத்துடன் பகிரங்க நிறுவனமொன்றி னால் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்பட்ட, குறித்தளிக்கப்பட்ட, உடைமையில் வைத்திருக்கப்பட்ட, அதற்கு உரித்தாக்கப்பட்ட, வைத்திருக்கப்பட்ட, பயன்படுத்தப்பட்ட, வேறொரு திறத்தவருக்கு குத்தகைக்குவிடப்பட்ட, வாடகைக்குவிடப்பட்ட அல்லது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் விடுவிக்கப்பட்ட ஏதேனும் தயாரிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்படாத அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் அல்லது அரசாங்க நடவடிக்கை முறைகளினூடாக அல்லது அமைச்சரவையினால் விதிக்கப்பட்ட இயைபான நடவடிக்கை முறையினூடாக கையுதிர்க்கப்படுகின்ற சொத்துக்கள் என்பவற்றை உள்ளடக்கும்;

"மாகாண சபை" என்பது, அரசியலமைப்பின் அத்தியாயம் XVIIஅ என்பதன் இன் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு மாகாண சபை எனப்பொருள்படும்;

"பகிரங்க கூட்டுத்தாபனம்" என்பது, கடன், மானியக்கொடை அல்லது வேறு வகையாக அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட நிதிகள் அல்லது மூலதனத்துடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படுகின்ற ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப்பொருள்படும்;

"பகிரங்க நிறுவனம்" என்பது, விசேட செலவுசெய்யும் அலகுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சபைகள், உள்ளூரதிகாரசபைகள், பகிரங்க கூட்டுத்தாபனங்கள், ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில் அல்லது வேறு பொறுப்புமுயற்சிகள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட எந்தக் கம்பெனிகளில் அரசாங்கம், ஒரு பகிரங்க கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபை அக்கம்பெனியின் பங்குகளில் ஐம்பது சதவீதத்துக்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அந்தக் கம்பெனிகள் என்பவற்றை உள்ளடக்கும்;

"அரசிறை கணக்கீட்டு அலுவலர்" என்பது, நிதி ஒழுங்கு விதிகள் 125(2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட அரசிறை மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு பொறுப்பாகவிருப்பதற்கு காலத்துக்குக்காலம் திறைசேரி சுட்டிக்காட்டுகின்ற அலுவலர் எனப் பொருள்படும்;

"விசேட செலவுசெய்யும் அலகு" என்பது, இயைபான ஒதுக்கீட்டுச் சட்டத்தில் செலவினத்தலைப்பொன்று வழங்கப்பட்டுள்ள ஓர் அமைச்சு, திணைக்களம், மாவட்டச் செயலகம் அல்லது மாகாண சபை தவிர்ந்த ஒரு உருவகம் எனப் பொருள்படும்.

**17.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**அட்டவணை** [பிரிவு 5]

| இல. | நிதிசாரா சொத்துக்களின் வகை | அத்தகைய சொத்தின் பெறுமான மதிப்பீட்டுக் கால இடைவெளி |
|---|---|---|
| 1. | காணிகள் | இயைபான ஆண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியில் உள்ளவாறாக ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒரு தடவை. எவ்வாறாயினும், இச்சொத்துக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க மாற்ற மொன்றை விளைவிக்கின்ற ஏதேனும் சம்பவம் ஏற்படின், அக்குறிப்பிட்ட ஆண்டின் திசெம்பர் 31 ஆந் தேதி யில் உள்ளவாறாக அத்தகைய சொத் துக்களின் பெறுமதி மதிப்பிடப்படுதல் வேண்டும். பெறுமதியில் குறிப்பிடத் தக்க மாற்றத்துக்கு அமைந்த சொத் தின் மீள்பெறுமானமதிப்பீடு, நடை முறைக்காரணங்களுக்காக விடயத்துக் கேற்ப புதிய பெறுமான மதிப்பீட்டி லிருந்து ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்கின்ற ஆண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ளவாறு அல்லது நேர்முன்னரான பெறுமான மதிப்பீட் டிலிருந்து ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்கின்ற ஆண்டின் திசெம்பர் 31 ஆந் தேதியன்றுள்ள வாறு செய்யப்படலாம். |
| 2. | கட்டிடங்கள் | |
| 3. | கட்டமைப்புகள் | |
| 4. | பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி | |
| 5. | வாகனங்கள் | |
| 6. | அலுவலக சாதனம் மற்றும் தளபாடம் | |